# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C 362 / 2023 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 3 |

| | | |
|---|---|---|
| Name | : | தினேஷ் |
| Father's Name | : | பாஸ்கரன் |
| Village | : | சென்னை |
| Taluk | : | சென்னை |
| Calling | : | Site Incharge, Private Company |
| Religion | : | இந்து |
| Age | : | 25 |
| ACCUSED | | **எதிரி அசீம்கான் ஆஜர்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.10.2024.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சென்னையில் தனியார் நிறுவனத்தில் Site Incharge ஆக பணிபுரிகிறேன். கடந்த 2022ல் MRF கம்பெனியில் Deepak Engineers என்ற கான்ட்ராக்ட்டில் Site Incharge ஆக பணிபுரிந்தேன். வழக்குவிபத்தில் இறந்து போன ராம்பிரேவேஷ்குமாரை எனக்கு தெரியும். விபத்து சம்மந்தமாக போலீசார் விபத்து நடந்து இரண்டு நாள்களில் சம்பவ இடத்தைப் பார்வையிட வந்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தனர். நான் சம்பவம் நடந்த இடம் குறித்து அவர்களிடம் விவரித்தேன். உடனே அவர்கள் குறித்து கொண்டனர். அவ்வாறு குறித்து கொண்டதில் நான் போலீசாரிடம் கையொப்பம் போட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வைமகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி ரஞ்சித்தை தெரியும். என்னோடு பார்வை மகஜரில்

சாட்சி கையொப்பம் இட்டது சாட்சி ரஞ்சித்தான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)</u>**

சம்பவம் நடந்த இடத்தில் இரத்தக்கறை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். விபத்து நடந்த இடத்தில் இரத்தம் கிடந்ததாக பார்வை மகஜரில் எழுதிக் கொண்டார்களா என்றால் தெரியவில்லை. ஆனால் இரத்தம் இருந்ததை நான் போலீசாரிடம் காட்டினேன். பார்வை மகஜர் தயார் செய்த அன்று நான் சென்னையில் இருந்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில்தான் இருந்தேன். சம்பவம் நடந்த அரைமணிநேரத்தில் நானும் எனது அப்பாவுமான அ.சா.1ம் சம்பவ நடந்த இடத்திற்கு வந்துவிட்டோம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில்தான் இருந்தோம். சம்பவ சமயத்தில் நானும் எனது அப்பாவுமான அ.சா.1ம் சம்பவ இடத்தில் இல்லை என்றும் சம்பவம் பற்றிகேள்விபட்டு அரை மணிநேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்தோம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளனவா என்றால் பொருத்தப்பட்டுள்ளன. அந்த சிசிடிவிகேமரா பதிவுகளை பார்த்தால் சம்பவ சமயத்தில் ஆஜர் எதிரி தான் கிரேனை ஓட்டினாரா என்பதும் நானும் அ.சா.1ம் சம்பவ இடத்தில் இருந்தோமா என்பதும் தெரியவரும் என்றால் சரிதான். டிரைவர் ஓட்டுவதற்கு லாக் புக் பராமரிப்பது வழக்கம். அந்த லாக்புக்கை பார்வையிட்டால் அன்றைய தினம் கிரேனை யார் ஓட்டினார் என்றும் எந்த சைட்டில் ஓட்டினார் என்றும் தெரிய வரும் என்றால் சரிதான். பார்வை மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யபட்டது என்றும் என்

முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:– இல்லை.</u>**

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**